[1974 மார்ச் 23

கட்டிக்குளம் கால்வாய்

* 575 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கட்டிக்குளம் கால்வாய் முகப்பு, மேடு பாய்ந்து விட்டதால் கட்டிக்குளம் கண்மாய்க்கு வேறு வழியில் தண்ணீர் கொண்டு செல்வது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

மடப்புரம் கண்மாய் பாலம்

* 576 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், திருப்புவனம்–பூவந்தி சாலையில் மடப்புரம் கண்மாய் கலுங்குப் பாலத்தை விரிவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

கரிகாலி உத்தண்டம்பட்டியில் புதிய ஏரி

* 577 வினா—திரு. சி. க. வடிவேலு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிரி வட்டத்தைச் சேர்ந்த கரிகாலி உத்தண்டம்பட்டியில் புதிதாக ஏரி அமைப்பதற்கான வேலைகள் துவங்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : இத்திட்டத் திற்கான ரூ. 9.45 லட்சத்திற்கான மதிப்பீடு திருச்சிராப்பள்ளி வட்ட மேற்பார்வை பொறியாளரின் ஆய்வில் உள்ளது.